1979 ஏப்ரல் 16]

திரு. துரை கோவிந்தராசன் : தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சமுதாயக் கிணறுகள் அரசின் நிதியிலிருந்து அமைக்கப்பட்டதா? அல்லது வேறுபல நிதிகளிலிருந்து செலவு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி ஒன்றியத்தின் உபரிநிதியும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்க கூடிய உதவித் தொகையும் சேர்த்து இந்தக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

திரு. துரை முத்துசாமி : இதைப்போன்ற திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா? ஒரு சமுதாயக் கிணறு போட எவ்வளவு மதிப்பீடு? அரசின் பங்குத் தொகை எவ்வளவு? ஊராட்சி ஒன்றியத்தின் பங்குத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மற்ற மாவட்டங்களைப் பற்றிய தகவல் இல்லை. மற்ற மாவட்டங்களிலும் அமைப்பதற்கு ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து அமைப்பதற்கான செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்படுமானால் பரிசீலிக்கலாம். 40,000 ரூபாய் செலவில் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்காக ஏற்கனவே ஊராட்சி ஒன்றிய நிதி போடப்படுகிறது. சில இடங்களில் பஞ்சாயத்துக்களில் இருந்து பணம் கட்டி தேவையின் அடிப்படையில் கிணறு வெட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தேவையிருக்குமானால் அதற்கேற்ற அளவுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் உபரி நிதி இருக்குமானால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மதுரை நகர அபிவிருத்தி திட்டம்.

*வினா எண் 708—திரு. வ.மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு எத்தனை கோடி ரூபாய் அரசு செலவிட உத்தேசித்துள்ளது?

(ஆ) என்னென்ன திட்டங்கள் உள்ளடங்கி உள்ளது ?

(இ) எத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும் ?

[1979 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ), மற்றும் (இ) விரிவான *அறிக்கை- ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மருதாசலம் : வைக்கப்பட்ட அறிக்கையைப் பொறுத்த அளவில் மதுரை நகரைப் பொறுத்து வைத்திருக்கிறார்கள்: மதுரையைப் போலவே பல்வேறு மாவட்டங்களில் முக்கியமான நகரங்கள் இருக்கின்றன . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி மதுரையைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அறிக்கையும் மதுரையைப் பற்றித்தான் இருக்கிறது.

நரிக்குடி குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 709 — திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வைகை ஆற்றிலிருந்து குழாய்களின் மூலமாக நரிக்குடிக்கு குடிநீர் கொண்டு செல்ல நரிக்குடி குடிநீர்த் திட்டம் ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

(இ) அத் திட்டத்தினால் பயனடையும் கிராமங்கள் யாவை? எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஜுலை 1979க்குள்.

(இ) கொட்டகாய்ச்சி ஏந்தல்
கிழவிக்குளம்
கீழ்கொன்றைகுளம்
முள்ளிக்குடி
ஆண்டியேந்தல்
டி. கடம்பன்குளம்
பிடாரிசேரி
வள்ளாக்குளம்
கே. புதுக்குளம்
அரிமண்டபம்
எஸ். கரிசல்குளம்
ராஜாக்கால் குடியிருப்பு

ஆகிய 12 கிராமங்கள்.

---

*739–740-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS